மாவட்ட நூலகத்தில் தூய்மைப்படுத்தும் பணி

திருவாரூர் மாவட்ட மைய நூலகத்தில் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்ட சாய்ராம் மெட்ரிக் பள்ளி மாணவ, மாணவியர்.

திருவாரூர், அக். 4: திருவாரூர் மாவட்ட மைய நூலகத்தில் தூய்மைப்படுத்தும்பணி புதன்கிழமை நடைபெற்றது.

செப். 15-ஆம் முதல் மாவட்டத்தில் அனைத்து நூலக வளாகம் தூய்மையே சேவை திட்டத்தின் கீழ் தூய்மைப்படுத்தும் பணி நடை பெற்றது. இறுதியாக திருவாரூர் புறவழிச்சாலையில் உள்ள மாவட்ட நூலகத்தில், நூலக வாசிப்பு வளர்ச்சி மன்றம் மற்றும் சாய்ராம்மெட்ரிக் பள்ளி சார்பில் தூய்மைப்படுத்தும் பணி நடை பெற்றது.

இப்பணியில் 100-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்று நூலக வளாகப் பகுதியை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

நிகழ்ச்சியில், மாவட்ட நூலக அலுவலர் பெ. செல்வராஜ், மைய நூலகர் இரா. ஆண்டாள், நூலகர்கள் வ. அன்பரசு, மா. ஆசைத்தம்பி, அன்னப்பழம், ஆசிரியை சுபத்திரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.